51


# காந்தீயம்

அகில இலங்கைக் காந்தி சேவா சங்கத்தின் திங்கள் வெளியீடு

Registered at the G. P. O. as a Newspaper in Ceylon

விலை சதம் 10

மலர் 12 | காந்தி நிலையம் - உருத்திரபுரம் (காந்தி ஆண்டு 105) 1975 ஏப்ரில் | இதழ்—7



**அறிவிப்பு**

காந்திய- சர்வோதய இலட்சியங்களுக்கமைய கிராமங்களிலும் நகரங்களிலும் சேவை செய்வதற்கு ஊழியர்கள் தேவை.

விபரங்களுக்கு:-
காந்தி நிலையம்,
உருத்திரபுரம்.


# சர்வோதய ஊழியர்கள் மாநாடு

## ஒரு விமர்சனம்

30. 03 75 இல், யாழ்ப்பாணத்திலே ஆனைப்பந்தியிலுள்ள 'மைற்'மண்டபத்தில் நடந்த சர்வோதய ஊழியர் மகாநாடு எதிர்பார்த்த அளவிற்கு மேல் சிறப்பாகவும் வெற்றிகரமாகவும் நடந்தேறியது,

பயன்மிக்க இம் மகாநாட்டை உருவாக்கிய, அகில இலங்கைக் காந்தி சேவா சங்கக் கொழும்புக் கிளையின் செயலாளரும், ஈழத்துச் சர்வோதய ஊழியருள் முன்னணிப் பிரமுகருமாகிய திரு. சோ. க. தம்பிப்பிள்ளை அவர்களின் இவ் அரிய முயற்சி மிகவும் பாராட்டுக்குரியது.

மட்டக்களப்பு, திருக்கோணமலை, வவுனியா முதலிய தூரப் பிரதேசங்களிலிருந்தும், யாழ்ப்பாண மாவட்டத்தின் பல பகுதிகளிலிருந்தும் ஊழியர்கள் சமுகமளித்தமையால், இம் மகாநாடு ஒரு பிரதிநிதித்துவம் வாய்ந்த மகாநாடு என்று சொல்லும் தரத்ததாய்த் திகழ்ந்தது.

மகாநாட்டிற்கு ஊழியர்களைப் பிரதிநிதிகளாக அனுப்பிய நிறுவனங்களினதும், ஊழியர்களினதும் விபரங்களை இப் பத்திரிகையின் பிறிதோர் பக்திற் காணலாம்.

மகாநாடு காலையில் குறித்த நேரம் தவறாமல் 9 மணிக்கே மவுனப் பிரார்த்தனையோடு ஆரம்பமாகியது. சிவதர்ம வள்ளல், பூலோக கற்பக தருநாயகர், திரு. க. கனகராசா அவர்கள் திருவிளக்கேற்றி, மகாநாட்டை திறந்து வைத்தார்கள்.

இளைப்பாறிய, வடமாநிலக் கல்வித் துறை இயக்குநரும், காந்திய தத்துவத்தில் மிக நெருங்கிய சார்புடையவருமாகிய திருமதி. இ. நவரத்தினம் அவர்களின் தலைமையில் முற்பகல் நிகழ்ச்சி நடந்தன.

இன்றைய சூழ்நிலையில், மனித குலத்திற்கு உய்தி காந்தி வழியில் தான் உண்டு என்பதை இரத்தினச் சுருக்கமாகத் தமது முன்னுரையில் தலைவர் விளக்கிக் கூறினார்கள்.

இந்நாட்டில், காந்தியத்தை இலட்சியமாகக் கொண்ட சங்கங்கள் பல உள. சர்வோதய ஊழியரும் பலர் உண்டு. ஆனால், இந்தச் சங்கங்களும் ஊழியர்களும் தத்தம் எல்லைக்குள் அடங்கி நின்று உழைக்கும் அளவிற்கே வளர்ந்திருக்கின்றன. இது ஒரு ஒடுக்க நிலை. சர்வோதயம் ஒடுங்கிக் கிடக்கும் தத்துவம் அன்று; விரிந்து, பரந்து இயக்கரீதியாக மலர்ச்சி பெறவேண்டியது.

ஆகவே, இந்த நாட்டில் சர்வோதயத்திற்கு ஒரு வேகத்தை ஊட்டி, அதனை ஒரு பரந்த இயக்கமாக மலர வைப்பதற்கு, ஊழியர்கள் யாவரும் ஒன்று சேர்ந்து, கருத்துப் பரிமாறல் செய்து, தெளிவு பெற்றவர்களாய், எழுச்சி மிக்க உணர்வோடு, உழைக்க உறுதி கொள்ளல் அவசியம் என்று தனது மனதிற்பட்டபடியால், இந்த மகாநாட்டைத் தான் அழைக்க முற்பட்டதாக, மகாநாட்டின் நோக்கம் பற்றிய விளக்கத்தோடு, தனது அழைப்பைப் பொருட்படுத்திச் சமுகம் தந்த ஊழியர்களுக்குத் தனது நன்றி கலந்த அன்பையும், தனது வரவேற்புரையில் திரு. சோ. க. தம்பிப்பிள்ளை தெரிவித்தார்.

ஊழியர் அறிமுகம் செய்தல் என்பதே அடுத்த நிகழ்ச்சி. இது மிகவும் சுவையான நிகழ்ச்சி. ஊழியர்கள் ஒவ்வொருவராக முன் வந்து தங்கள் பேர், ஊர், சங்கம், ஈடுபட்ட ஊழியர்கள் முதலியவற்றைச் சொல்லி தங்களைத் தாங்களே அறிமுகம் செய்து கொண்டார்கள்.

அடுத்த. நிகழ்ச்சியாக நிரலில் தரப்பட்ட அகிம்சையும் நீதியும் சமாதானமும் கொண்ட சமுதாய அமைப்பு என்னும் விஷயம் பற்றிக் கருத்துப் பரிமாறல் இடம் பெற்றது.

$12\frac{1}{2}$ மணியளவில் முற்பகல் நிகழ்ச்சிகள் முடிவுற்றன.

ஊழியர்கள் அனைவருக்கும் மண்டபத்திலேயேமதியஉணவு அளிக்கப்பட்ட படியால், பிற்பகல் நிகழ்ச்சிகள் தொடங்கும் வரையும் யாவரும் ஒருவரோடொருவர் கலந்துரையாடி-அளவளாவி-உறவைப் பெருக்கிக் கொள்ளும் வாய்ப்புக் கிடைத்தது.

பிற்பகல் நிகழ்ச்சி, புங்குடுதீவு-சர்வோதய நிலைய சகோதரிகளின் சர்வோதய பாடலுடன் $2\frac{1}{2}$ மணிக்கு ஆரம்பமாகியது. காந்தி சேவா சங்கத்தின் முந்நாள் தலைவர் முதலியார் செ. சின்னத்தம்பி அவர்கள் தலைமை வகித்தார்கள்.

(4 ஆம் பக்கம் பார்க்க)

# காந்தீயம்

உருத்திரபுரம், [இலங்கை]

தொலை பேசி; 254

(கிளிநொச்சி)

காந்தி ஆண்டு 105

1975 ஏப்ரில்


## நல்லறிவு

சென்ற மாதம், சர்வோதயசேவையில் ஈடுபட்டோர் கருத்தரங்கு யாழ்ப்பாணத்து 'மைற்' மண்டபத்தில் நடந்தது ஊழியர்க்குப் பலவிதத்திலும் ஒரு புதிய தென்பையும் நெறியையும் அளிக்கும் வகையினதாயிருந்தது.

சென்ற இதழில் கருத்தரங்குகளின் மேன்மையையும் கருத்துச் செம்மையின் முக்கியத்தையும் பற்றிக் கூறியிருந்தோம். கூட்டுச் சிரமதானம் எவ்வாறு ஒரு மனப்பான்மையையும் ஒன்றிய உணர்ச்சியையும் அளிக்குமோ அது போல் கருத்தரங்குகள், சந்தேகம் தீர்க்கும், தெளிவு உண்டாக்கும். புதிய சிந்தனைகளைப் பிறப்பிக்கும். உண்மையில்நடைபெற்ற கருத்தரங்கிலிருந்து ஓர் உண்மை தெளிவாயிற்று. ஊழியர்கள் ஒரு தாபனமாய் அமையா விட்டாலும் ஒன்றுபட்டு மக்களுக்குச் சேவை செய்வதில் பெரும் ஆர்வமும் ஒருமனப்பான்மையும் காட்டினர் என்பதே அது. உடல்கள், அமைப்புகள் ஒன்று படாவிடினும் உள்ளங்கள் சக்திகள் ஒன்றுபடின் அது நாட்டு மக்களுக்கு எவ்வளவோ உயர்ந்த பணியைத் தருதல் கூடும். அமைப்புகள் தாபனங்கள் ஒன்று படுவதைப் பற்றி நாம் அதிகம் அக்கறை கொள்ளத் தேவையில்லை. கருத்தொருமித்துக் கருமமே கண்ணையின்சர்வோதயத்தின் வளர்ச்சி பற்றி நாம் கவலைப் படத்தேவையில்லை. சர்வோதயம், காந்தீயம் இரண்டிலும் ஒருவர் மற்றைத் தொண்டரிலும் தாம் புறம்பட்டவர் என்றோ, புறம்பான ஒரு வர்க்கம் என்றோ, உயர்வு தாழ்வோ கருதக் கூடாது. சக்தியைத் திரட்டிப் பணியாற்றுவதில் கண்ணுயிருக்க வேண்டும். நடைபெற்ற கருத்தரங்கின் பெறுபேருக இந்த உண்மையைத் தொண்டர்கள் உணர்ந்திருக்கிருர்கள் என்பது தெளிவாக நமக்குத் தோன்றுகிறது.

இந்தக் கருத்தரங்கு வெறும் கருத்தளவில் நின்று விடாது சிந்தனையைத் தூண்டிச் செயல் திறனை வளர்க்குமென்று நம்புகின்றோம். அன்றியும் ஆண்டில் இரண்டு முறையேனும் கூடிக் கருத்துப் பரிமாற்றத்தால் என்ன பயன் உண்டானது என்று ஆராய்தல் நல்லது. புதிய கருத்தினுல் புதிய செயல் தோன்ற புதிய இடர் தோன்றும். அவற்றைக் கலந்தாலோசிப்பதால் தீர்த்துக் கொள்ளலாம். எனவே கருத்து, பின் செயல், பின் புதிய கருத்து என்று மனிதனின் பணித்திட்டங்கள் வட்டமான முறையில் பரிணமம் பெறும்.

கருத்துகளின் உயர்வு கலந்தாலோசிப்பதில் தான் தங்கியுள்ளது. உயர் கருத்துகள் ஒருவரின் ஏகபோ உரிமை அன்று பல பல எண்ண அலைகள் சங்கமிப்பதால் தான் சீரிய கருத்துக்கள் தோன்றுகின்றன.

வேதம் உபநிடதங்கள் கலந்து திரண்டபாற் கடல் தான் பகவத்கீதை. ரொல்ஸ்ரோய், ரஸ்கின், கீதை கலந்து பரிணமித்தது காந்தீயம். ஏஜெல், மாக்ஸ், ஏஞ்சல்ஸ் ஆகியோர் கலந்து பிறந்தது மாக்சியம். தேவாரம், பாசுரம் எல்லாம் வேதசாரம். பெரிய சிந்தனையாளரின் எண்ணக் கருக்களின் விளைவே விஞ்ஞானம். நவீன விஞ்ஞானம் தனி ஒருவர் புத்திப்பேறல்ல. வள்ளுவர் குறளுமே, பதஞ்சலி, கீதை, பழந்தமிழ், சுக்கிரநீதி எல்லாம் ஒன்றிய படைப்பாம். எனவே ஒரு கருத்துடன் பிறிதொரு கருத்துச்சேர்வதால் தோன்றுவது இரண்டு கருத்தல்ல; பற்பல ஆபூர்வ சிந்தனைகளாம். இதை நாம் நன்கு மனதில் பதித்து பற்பல கருத்துக்கள் நம் நெஞ்சில் பாய விடுவோம்; பல புதிய முளைக்க வைப்போம். அதனுல் நமக்குப் பயனுண்டு. புதிய சக்தி பிறக்கும்.

உலகத்தில் எல்லாப் பஞ்சங்களுள்ளும் மிகக் கொடிய பஞ்சம் அறிவுப்பஞ்சமாகும். மற்றை எல்லாப் பஞ்சங்களுக்கும் வித்தாயமைவது அறிவிப் பஞ்சமாம். அறிவிருந்தால் மற்றைப் பஞ்சங்களை இலகுவில் விலக்கலாம். இதை நினைத்தே வள்ளுவர்,

"அறிவில்லாமையே இல்லாமை பலவற்றுள்ளும் கொடிய இல்லாமையாகும். மற்றை இல்லாமைகளை உலகம் அத்தகைய இல்லாமையாகக் கருதாது" என்ருர்

"அறிவின்மை இன்மையுள் இன்மை; பிறிதின்மை
இன்மையா வையாது உலகு"
என்பது அந்தக் குறள்.

புத்தி வறுமையை விட மற்றை வறுமைகளை உண்மையான வறுமையாக உலகம் கணியாது என்கிருர் வள்ளுவர்.

அடுத்த கருத்தரங்கில் நம் சிந்தனைச் செல்வம் பெருகுவதாக. புல்லறிவாண்மையை விட்டு நல்லறிவாண்மையை நோக்கி நாம் செல்வோமாக.

## நன்றி

யாழ்ப்பாணத்தில், சர்வோதய ஊழியர்களின் மகாநாட்டை நடத்துவதற்கு 'மைற்' மண்டபத்தை உதவிய கலாநிதி. கோபாலப்பிள்ளைமகாதேவா அவர்கட்கும், மகாநாட்டைத் தொடக்கி வைத்த சிவதர்மவள்ளல், பூலோக கற்பக தரு நாயகர் திரு. க. கனகராசா அவர்கட்கும், பண உதவி செய்த யாழ்ப்பாணம் பிரபல வர்த்தகர் திரு. வி. எம். பரமநாதன், காந்தி சேவா சங்க முந்நாள் தலைவர் திரு. ச. பேரின்பநாயகன், வைத்திய கலாநிதி. க. சிவஞானரத்தினம் ஆகியோருக்கும் உணவு ஏற்பாடுகளைக் கவனித்த திரு. த. விநாயகம் குழுவினருக்கும், மகாநாட்டைச் சிறப்பித்த நிறுவனங்களுக்கும், சர்வோதய ஊழியர்களுக்கும் மனமுவந்த நன்றியைத் தெரிவிக்கிறோம்.

## வரப்பெற்றோம்

"எமது அரசு"
535, பருத்தித்துறை வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.

# சர்வோதய ஊழியர்கள் மகாநாட்டில்

## பங்கு பற்றிய அன்பர்கள்

மட்டக்களப்பு

1. திரு. க. பாரதிதாசன்
2. " சி. அன்ரனி

திருக்கோணமலை

3. தியாகி. கோ. இராஜகோபால்
4. திரு. பொ. கந்தையா

கேகாலை

5. திரு. ஆ. விநாயகமூர்த்தி

கொழும்பு

6. கலாநிதி. கோபாலபிள்ளை

மகாதேவா

7. திரு. சோ. க. தம்பிப்பிள்ளை

வவுனியா

8. திரு. சோ. இராசசுந்தரம்

நெடுங்கேணி

9. திரு. ச. அ. டேவிட்

வெள்ளாங்குளம்

10. திரு. இ. இ. கந்தையா
11. திரு. கே. வி. ஆச்சாரி

விநாயகபுரம்

12. திரு. சி. கனகநாயகம்

உருத்திரபுரம்

13. திரு. சி. க. வேலாயுதபிள்ளை

தர்மபுரம்

14. திருமதி. ப. சிவபாக்கியம்

கிளிநொச்சி

15. திரு. வே. கதிரவேலு

சாவகச்சேரி

16. திரு. த. இராசரத்தினம்

மீசாலை

17. திரு. கு. வி. மகாலிங்கம்

வதிரி

18. திரு. ஆ. ம. செல்லத்துரை

புலோலி

19. திரு. க. நடனசபாபதி
20. " க தங்கவேல்

உரும்பராய்

21. வயித்தியகலாநிதி கே. சிவஞானரத்தினம்

கொக்குவில்

22. திரு. இ. கந்தையா
23. " கோ. ஜயசுந்தரம்

சங்கானை

24. திரு. ச. கந்தசாமி

சங்குவேலி

25. திரு. பொ. சண்முகநாதன்
26. " ம. தேவராஜா

வட்டுக்கோட்டை

27. திரு. செ. சின்னத்தம்பி

சண்டிலிப்பாய்

28. திரு. சி. இராசரத்தினம்

கொழும்புத்துறை

29. திரு. செ. சண்முகலிங்கம்

யாழ்ப்பாணம்

30. திரு. க. சி. குலரத்தினம்
31. " கா. நவரத்தினம்
32. திருமதி. இ. நவரத்தினம்
33. செல்வி. ஆ. பாலசுப்பிரமணியம்
34. திரு. கு. நேசையா
35. " இ. சரசானந்தவேல்
36. " க. கனகரத்தினம்
37. " சு. பரநிருபசிங்கம்
38. " க. தர்மராஜா.
39. " கோ. விநாயகமூர்த்தி
40. வயித்திய கலாநிதி. வ. த. பசுபதி
41. திரு. த. விநாயகம்
42. " இரத்தினகோபால்
43. " க. கனகராசா
44. ம. தமயந்தி

புங்குடுதீவு

45. திரு. க. திருநாவுக்கரசு
46. " க. பிரகதீஸ்வரன்
47. " சி. தம்பு
48. " சு. வில்வரத்தினம்
49. " மு. பொன்னம்பலம்
50. " வை. திருநாவுக்கரசு
51. " நா. தர்மலிங்கம்
52. " மூ. நேமிநாதன்
53. " ப. சுந்தரலிங்கம்
54. செல்வி. ம. பங்கயற்செல்வி
55. " ம. சியாமளா
56. " ப. வாசுகி
57. " க. புஷ்பமணி

காரைநகர்

58. திரு. கு. பொன்னையா
59. " மு. ஆ. கந்தையா
60. " வை. சுந்தரமூர்த்தி
61. " சு. சத்தியமூர்த்தி
62. " வே. த. அம்பலம்
63. " வி. அருளானந்தம்
64. " ஆ. வே. சோமசுந்தரம்
65. " பொ. நவரத்தினம்
66. செல்வி. ந. நாகமுத்து
67. " சு. அன்னபூரணம்
68. " ஐ. ரோகணிஅம்மா

## ஒரு சத்திய சோதனை

நேரம் காலை 8.50; நிகழ்ச்சி நிரலில் குறிப்பிட்டபடி 9 மணிக்கு சர்வோதய ஊழியர் மகாநாட்டை ஆரம்பிக்க இன்னும் 10 நிமிடங்கள் மாத்திரம் உண்டு. திரு.சி.கனகநாயகம் ஆசிரியர் 9 மணிக்கு மகாநாட்டைத் தொடங்க வேண்டும்; சிறிது தாமதித்தாலும் காந்தி அடிகளை அவமதிப்பதாகும் என வற்புறுத்துகிறார்; மண்டபத்தில் 10 ஊழியர் வரை இருக்கிறார்கள். என்ன செய்வதென்றே தெரியவில்லை. ஊழியர்கள் வருகை தராவிடினும், மகாநாட்டைத் தொடக்கி வைக்கும் மில்க்வைற் உரிமையாளர் திரு.க.கனகராசா அவர்கள் உரிய நேரத்திற்கு வர வேண்டுமே என்ற கவலை! சிறிது நேரம் ஊழியர்கள் அங்கும் இங்கும் பார்க்கிறார்கள்.

நேரம் 8.58; திரு கனகராசா மண்டபத்துள் நுழைகிறார். மௌனப் பிரார்த்தனை. 9 மணிக்கு தீபம் ஏற்றப்பட்டு மகாநாடு தொடங்குகிறது. எல்லோருடைய உள்ளத்திலும் பூரண திருப்தி.

## அன்பர் தபால்

30. 03. 75 ஞாயிற்றுக் கிழமை நடைபெற்ற சர்வோதய ஊழியர் மகாநாடு மிக மிக வெற்றிகரமாக நடைபெற்றமையை நினைத்து நான் மிகவும் மகிழ்ச்சியடைகிறேன். எனது வாழ்த்தும் நன்றியும் உரியதாகும்.

புதிய புதிய சர்வோதயத் தோழர்களைப் பழகுவதற்கு அரியவாய்ப்பை அளித்தது. திரு. ச. அ. டேவிற் அவர்களைச் சரியாகப் பயன் படுத்தினால் அக்கராயன் - காந்திக்கிராமம், திட்டப்படி நிறைவேறும் என்று எனது உள்ளுணர்வு உணர்த்துகிறது. சாந்தி.

ஆ. ம. செல்லத்துரை,
வதிரி, கரவெட்டி.

## சர்வோதய ஊழியர்கள் மகாநாட்டில் பங்குபற்றிய நிறுவனங்கள்

1. அகில இலங்கைக் காந்தி சேவா சங்கம், உருத்திரபுரம்
2. இலங்கை சர்வோதய சேவா சங்கம், காரைநகர்
3. இலங்கை தேசிய சர்வோதய சிரமதான சங்கம், வட மாகாணக் கிளை, புங்குடுதீவு,
4. கிராஞ்சி- சர்வோதய கிராமம், வேரவில், பூநகரி(வழி)
5. காந்திஜி இளைஞர் முன்னேற்ற மன்றம், சங்குவேலி-தெற்கு, மானிப்பாய்
6. கிழக்கிலங்கை காந்தி இளைஞர் மன்றம், 15/2, அதிகார்வீதி, மட்டக்களப்பு
7. கஸ்தூரிபாய் காந்தி நிலையம், தருமபுரம், பரந்தன் (வழி)
8. நாவலர் தோட்டம், நெடுங்கேணி
9. காந்திக் கிராமம், அக்கராயன்குளம்.
10. சர்வோதய நிகேதனம், இந்துக் கல்லூரிச் சதுக்கம், இரத்மலானை
11. குருகுலம், கிளிநொச்சி.
12. இலங்கை சர்வோதய மாதர் சங்கம், காரைநகர்.
13. பனம்பொருள் உற்பத்தி நிலையம் கொத்தியவத்தை, புலோலி.
14. இயற்கை வள அபிவிருத்தி இயக்கம், புலோலி மேற்கு, பருத்தித்துறை
15. காந்தி கூட்டுறவு விவசாயப் பண்ணை, வவுனியா.
16. ஆனந்த குருகுலம், விநாயகபுரம்
17. பூரண சர்வோதய இயக்கம், புங்குடுதீவு
18. தென்மராட்சி பக்தி நெறிக் கழகம், சாவகச்சேரி
19. அறிவுச் சுடரகம், வெள்ளாங்குளம், மன்னார் (வழி)
20. காந்தி சேவா சங்கம், திருக்கோணமலை

## சர்வோதய ஊழியர் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கருத்துப் பரிமாறல் என்ற நிகழ்ச்சியில், கிராமராஜ்யம், சமுதாய மாற்றத்திற்கு மகாத்மாவின் கல்வித்திட்டம், ஆகிய விஷயங்கள் தொடர்ந்து இடம் பெற்றன. இந்த நிகழ்ச்சியில், பேராசிரியர், கு. நேசையா, கலாநிதி கோபாலபிள்ளை மகாதேவா, வயித்திய கலாநிதி க. சிவஞானரத்தினம், வயித்திய கலாநிதி சோ. இராசசுந்தரம் போன்ற முதியோரோடு பல இளைஞர்களும் பங்குபற்றினர். அந்த இளைஞர்களுட் சிலர் சிறந்த சிந்தனையாளராய் - சர்வோதய தத்துவத்தை பொதுவுடைமைத் தத்துவம் முதலிய ஏனைய தத்துவங்களோடு ஒப்பிட்டுச் சீர்தூக்கிப் பார்க்கும் நுழைமதியுடையோராய் - இருப்பக் கண்டு மகிழ்ந்தோம்.

சர்வோதய இயக்கம் அரசியலில் ஈடுபடலாமா என்ற விஷயம்பற்றிப்பல பட்ட கருத்துக்கள் வெளியிடப்பட்டன. ஜயப்பிரகாஷ் நாராயண் அரசியலில் கலந்து கொள்வதை எடுத்துக்காட்டி வாதாடினர் சிலர். சர்வோதயத்திற்குத் தந்தையாய் இன்று விளங்குபவர் விநோபாஜியே என்றும் ஜயப்பிரகாஷ் நாராயண் அல்ல என்றும் எதிர் வாதம் புரிந்தார் தியாகி கோ. இராஜ்கோபால் அவர்கள்.

சர்வோதயத்தைப் பொறுத்த அளவில் இந்தியாவின் நிலைமை வேறு; இந்நாட்டின் நிலைமை வேறு.

எங்கள் நாட்டில் சர்வோதயம் தவழும் நிலையைக் கூட இன்னும் அடையவில்லை. ஆகவே, அரசியலில் கலந்து கொள்ளும் பெரும் பொறுப்புக்கேற்ற புனித ஊழியர்களை நாங்கள் இன்னும் எங்கள் மத்தியில் உருவாக்கிக் கொள்ளவில்லை. ஆகையால், இன்னும் சிலகாலம், உண்மையான- புனிதமான- சர்வோதயப் பண்புகளின் நிறைவான- ஊழியர்களை உருவாக்குவதோடு, மக்கள் மத்தியில் சர்வோதயப் பிரசாரமும் தொண்டும் செய்வதாகிய ஒரு தார்மீக இயக்கமாகவே எங்கள் சர்வோதய இயக்கத்தை வைத்துக் கொள்வதே நல்லது என்று தலைவர் தமது கருத்தைத் தெரிவித்தார்.

கருத்துப் பரிமாறலேயாகையால், தீர்மானம் ஒன்றும் எடுத்துக் கொள்ளப்படவில்லை.

ஆனல், இந்தமாதிரி ஊழியர் மகாநாடுகள் அடிக்கடி நடாத்துவது மிகவும் விரும்பப்படுவது என்றும், இன்று போல் இனிமேலும் மகா நாடுகளை அமைக்க, திரு. சோ. க. தம்பிப்பிள்ளையை அமைப்பாளராக நியமிக்கிறோம் என்றும் ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.

திரு. தம்பிப்பிள்ளை நன்றியுரை கூறிய பின், மவுனப் பிரார்த்தனையோடு 5 மணியளவில் மகாநாடு இனிது நிறைவெய்தியது.

## ஒரு பிரசுரம்

### சர்வோதயச் சிந்தனைகள்

சர்வோதய தத்துவத்தை விளக்கி உடும்பராயைச் சேர்ந்த, வைத்திய கலாநிதி. க. சிவஞானரத்தினம் அவர்கள் எழுதிய 'சர்வோதயச் சிந்தனைகள்' என்னும் பிரசுரத்தை, சிவதர்மவள்ளல். திரு. க. கனகராசா அவர்கள் அச்சிடுவித்து சர்வோதய ஊழியர் மகாநாட்டில் வெளியிட்டு, எல்லோருக்கும் அன்பளிப்புச் செய்து கூறியதாவது;

சர்வோதய சகோதரிகள் இலங்கைக்கு வருகை தந்து பாதயாத்திரையை மேற்கொண்ட போது அவர்களைத் தரிசித்து, அவர்களுடைய கருத்துரைகளைக் கேட்கும் சந்தர்ப்பம் கிடைத்தது. அப்போதிருந்தே என்னைச் சர்வோதயப் பணிக்கு அர்ப்பணித்துள்ளேன். இதனை என் வாழ்க்கையின் பெரும் பேருகக் கருதுகிறேன்.

இப்பத்திரிகை அகில இலங்கைக் காந்தி சேவா சங்கத்திற்காக உருத்திரபுரம் சி. க. வேலாயுதபிள்ளை அவர்களால் இரத்மலானை காந்தி சேவா சங்க சர்வோதய அச்சக உபகரணங்களின் உதவியுடன் கொழும்பு குமரன் அச்சகத்தில் அச்சிடப்பட்டது.